சத்தம் கேட்டு அருகே இருந்தவர்கள் ஓடிவந்து, படுகாயம் அடைந்த சிறுவனை மீட்டு சிகிச்சைக்காக வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தகவல் அறிந்து வந்த தீயணைப்பு துறையினர் மற்றும் பொன்னூர் போலீசார் விரைந்து சென்று அபினேஷ், முகேஷ் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். வீட்டின் கட்டிடம் இடிந்து விழுந்ததில் 2 பள்ளி மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

# ‘தாய்நாடான தமிழ்நாடு தான் என் வீடு...

**(1–ம் பக்கத் தொடர்ச்சி)**

சொந்தகளுடன் இனி நிற்கப்போவது இந்த விஜய் மட்டும் தான்.

முதல் படைவீரன்

தமிழ்நாட்டின் முதல் படைவீரனாக, முதல்பாதுகாவலானாகநிற்கப்போவது இந்த விஜய்தான். அது தான் என் குறிக்கோள். இந்த விஜய் உங்களிடம் ஓட்டுக்கேட்க மட்டும் வரவில்லை, நீதி கேட்கத்தான் வந்திருக்கிறேன். உங்களுக்கு நீதி கிடைக்கதான் நான் அரசியலுக்கு வந்தேன். இந்த விஜய் எதற்கு அரசியலுக்கு வந்தான். தன்னை நேசித்த உங்களுக்காக அரசிலுக்கு வந்தான். அது தவறா? எல்லாதை'தையும் ஒதுக்கிவிட்டு அரசியலுக்கு மட்டும் வந்தது தவறா? மற்ற கட்சிகளுக்கு மாநாடு மற்றும் பொதுகூட்டம் நடத்த அனுமதி கொடுப்பார்கள். ஆனால் நமக்கு மட்டும் எதுக்கும் அனுமதி கொடுக்கமாட்டார்கள். இது என்ன நியாயம்?

நான் மக்களை சந்திப்பதற்கும், அவர்கள் குறை கேட்பதற்கோ... அல்லது மக்கள் என்னை சந்திப்பதற்கு உரிய இடமோ, பாதுகாப்போ கொடுக்க மாட்டார்கள். கொடுக்கவும் விடமாட்டார்கள். இது ஸ்டாலின் சார் ஆப்பரேட்டிங் புரொசிஜர் (SOP). இது என்ன நியாயம். நான் உண்மையானவன் என்பது தெரியும். நமக்கு எதிராக சதி செய்வது யார் என்பது உங்களுக்கு தெரியும். அதனால் என் சொந்தங்களான உங்களிடம் நீதி கேட்காமல் யாரிடம் நீதி கேட்பேன்.

விசிலை ஊதி அனுப்புங்கள்..

'செப்பே' எடுக்காத கூட்டணி கணக்கும், காசு கொடுத்து ஓட்டு வாங்குவதும் நான் வந்தபிறகு எடுபடாது. ஆயிரம், 2 ஆயிரம், 5 ஆயிரம் என்று கொடுப்பார்கள். அது உங்கள் பணம். பணத்தை வாங்கிக் கொண்டு, அவர்கள் காதில் விசிலை ஊதி அனுப்புங்கள்.

இளம் தலைமுறையினருக்கும் ஒன்று சொல்ல வேண்டும். பணம் கொடுக்கும் கலாசாரத்தை ஒழிக்க வேண்டும். எல்லோரும் கையை நீட்டுங்கள். உறுதிமொழி ஒன்று எடுத்துக்கொள்வோம். "எங்கள் ஓட்டு எங்கள் உரிமை, எங்களை யாரும் விலைக்கு வாங்க முடியாது. எங்கள் ஓட்டு விசில் சின்னத்திற்கு. வேறு யாரையும் நம்பி ஏமாறமாட்டோம்.

நீங்கள் கொள்ளையடித்த பணத்தை குப்பையில்தான் போடவேண்டும். மக்கள் குப்பையில்தான் உங்களை தூக்கிப் போடுவார்கள். மக்களையும், மக்கள் எதிர்காலத்தையும் மனதில் வைத்து அரசியலுக்கு வந்துள்ளேன். பெற்றோரிடம் யாருக்கு ஓட்டு என்று மைக்கை நீட்டி கேட்டால், அதற்கு பின்னால் நின்று விசில் சின்னத்துக்கு என்று சொல்லும்மா என்று குழந்தைகள் பேசும் வீடியோவை நான் பார்த்தேன்.

நான் எந்த கட்சியையும் ஒழிக்க அரசியலுக்கு வரவில்லை. வெறுப்பு அரசியல் செய்யவும் வரவில்லை. தேர்தலில் நின்று ஜெயித்து மக்களுக்கு நல்லது செய்ய அரசியலுக்கு வந்துள்ளோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மக்களின் அடிப்படையை தீர்ப்பதே முதல் வேலை. அதை தேடிப்போவதே அஜண்டா. தேர்தல் அறிக்கை தயாராகிக் கொண்டு இருக்கிறது. விரைவில் வெளிவரும்.

தூய சக்தி Vs தீய சக்தி

சும்மா ஆட்சிக்கு வரவேண்டும் என்பதால், நடைமுறைக்கு சாத்தியமில்லாததை வாக்குறுதியாக கொடுக்கமாட்டேன். நான் மீண்டும் சொல்கிறேன். 2 பேருக்கு நடுவில்தான் போட்டி. ஒன்று தி.மு.க., இன்னொன்று த.வெ.க., அதாவது தூய சக்தி த.வெ.க., தீய சக்தி தி.மு.க. இடையேதான். இது தமிழக சட்டசபை தேர்தல். யார் பொய் வாக்குறுதியை கொடுப்பது. நாம் யாரை எதிர்க்க வேண்டும். மக்கள் விரோத ஆட்சி நடத்தும் தி.மு.க.வைத்தான். விஜய்யை நம்புகிறீர்களா, ஸ்டாலின் சாரை நம்புகிறீர்களா?

குருப்2 தேர்வைக்கூட ஒழுங்காக நடத்த முடியவில்லை. உலக நாடுகளுடன் போட்டிபோடுகிறார்களாம். வரப்போவது உங்கள் ஆட்சி, நம்ம ஆட்சி. இளைஞர்களின் வேலைவாய்ப்பை மனதில் வைத்து நல்லதீர்வுகாண்போம். விக்கிரவாண்டி மாநாட்டில் நான் சொன்னேன். ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்றேன். எல்லா கூட்டணியிலும் இப்போது அது வெடிக்கிறது. அவர்களுக்கு எல்லாம் ஜெயிக்கத்தான் கூட்டணி. மற்றபடி அவர்கள் தனியாகத்தான் செயல்படுவார்கள். உங்களுடன் நான் இருக்கிறேன். வெற்றி நிச்சயம்.

இவ்வாறு அவர் பேசினார்.

# கோடைக் காலச் சிறப்புத் தொகை ரூ.2000 திடீரென அறிவித்தது எப்படி? விஜய் கேள்வி

சென்னை, பிப். 13–

கோடைக் காலச் சிறப்புத் தொகை ரூ.2000 புதிதாக அறிவித்தது எப்படி? என்று விஜய் கேள்வி எழுப்பி உள்ளார்.

இது தொடர்பாக தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்த ஆண்டு மட்டும்தான் கோடைக் காலம் வருகிறதா என்ன? ரூ.2000 திடீரென அறிவித்தது எப்படி? வழக்கமாக மாதந்தோறும் 15ஆம் தேதி வரவு வைக்கப்படும் மகளிர் உரிமைத் தொகை, குறிப்பாக இன்று 13ஆம் தேதி வரவு வைக்கப்பட்டு அறிவிக்கப்படுவது ஏன்? இத்தனைக்கும் காரணம் வீதிக்கு வீதி மட்டுமில்லாமல், வீட்டுக்கு வீடு ஒலிக்கும் விசில் சத்தம்தான். குறிப்பாக, ஒட்டுமொத்த மகளிரின் விசில் சின்னத்திற்கான பேராதரவு அலையைக் கண்டு உண்டான அச்சம் மட்டுமே இதற்குக் காரணம். இப்போதுகூடப் பாருங்கள். ஒன்று மட்டும் உறுதியாகத் தெளிவாகிறது. நாம் மட்டுமே இவர்களுக்கு அச்சமூட்டச் செய்யும் ஆகப்பெரும் வெற்றிக்கான மக்கள் சக்தி. அது மட்டுமா? இவர்களை வலிய நல்லது செய்ய வைக்கும் வலிமையான அரசியல் பெருவிசையும் நாம்தான்.

அதுமட்டுமா? தி.மு.க. தனக்குப் போட்டியாகக் கருதுவதும் தன்னை வெல்லப் போகும் ஒரே மக்கள் சக்தி எனக் கருதுவதும் த.வெ.க.வைத் தான் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தமிழகத்தின் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி செய்துள்ளார். எனவே, என்னருமைத் தாய்மார்களே, அக்கா, தங்கைகளே, உங்கள் மகன், உங்கள் அண்ணன், உங்கள் தம்பி விஜயின் அரசியல் வருகையின் தாக்கத்தால் கிடைத்த இந்தத் உரிமைத் தொகையைச் சந்தோசமாக வாங்கிக்கொள்ளுங்கள்.

நம் ஆட்சி மலர்ந்ததும், அரசியல் ஆதாயத்திற்காகச் சுயநலமாகச் செயல்படும் இவர்களைப் போலன்றி, உண்மையான அக்கறையுடன் நம் மக்களுக்கு அனைத்து வகைகளிலும் நல்லது மட்டுமே செய்வோம். அது உறுதி. தி.மு.க. அரசுக்குத் தேர்தல் தோல்விக்கான திகில் ஊட்டும் அளவிற்கு விசில் ஊதும் தமிழ்நாட்டு மகளிருக்கு என் மனமார்ந்த நன்றி.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.




Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, No.1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600024 on behalf of M/s. Newsmen Associates Private Limited. நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733910, E-mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு இ–மெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.

ஜெயலலிதா 78–வது பிறந்தநாள்

# 78 குழந்தைகளுக்கு பரிசுப் பெட்டகம், அன்னதானம், நலத்திட்ட உதவிகள்

## அண்ணா தொழிற்சங்க பேரவை முடிவு





**சென்னை, பிப்.13–**

**ஜெயலலிதாவின் 78–வது பிறந்தநாளையொட்டி பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க அண்ணா தொழிற்சங்க பேரவை முடிவு செய்துள்ளது.**

அண்ணா தொழிற்சங்கப் பேரவை தலைவர் தாடி ம.ராசு தலைமையிலும், அண்ணா தொழிற்சங்கப் பேரவை செயலாளர் ஆர். கமலக்கண்ணன் முன்னிலையிலும் அண்ணா தொழிற்சங்கப் பேரவை சார்பாக ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழா கொண்டாடுவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அமைச்சர்கள் சி. பொன்னையன், பா.வளர்மதி, எஸ்.எஸ்.வைகை செல்வன், அமைப்புச் செயலாளர் என்.முருகுமாறன், அமைப்புச்சாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் கா.சங்கரதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

மேலும் பேரவை துணைத்தலைவர்கள் எஸ்.கோவிந்தராஜ், கே.சிங்கார வேலு, பேரவை இணைச்செயலாளர்கள் ஆர். சங்கரலிங்கம், சி.கே.துளசிதாஸ், பேரவை துணைச்செயலாளர்கள் பொன் தனபாலன், பி.கந்தசாமி பாண்டியன் மற்றும் அனைத்து பிரிவு மாநில நிர்வாகிகள், அனைத்து இணைப்புச் சங்க நிர்வாகிகள்,

போக்குவரத்துப் பிரிவு அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தலைவர் எஸ்.கே. மகேந்திரன், துணைத்தலைவர் கே.மனோகரன், இணைச்செயலாளர்கள் இரா.அன்பு, கே.ரெத்தினம், துணைச்செயலாளர் பி.வி.வீரேசன் ஆகியோர் மற்றும் அனைத்து மண்டல போக்குவரத்துக் கழக அண்ணா தொழிற்சங்க தலைவர், செயலாளர்,பொருளாளர், மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் அனைத்து மண்டல அண்ணா நிர்வாகப் பணியாளர்கள் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் முடிவில் அண்ணா தொழிற்சங்கப் பேரவை பொருளாளர் எம்.அப்துல் அமீது நன்றி கூறினார்.

புரட்சித்தலைவி அம்மாவின் 78வது பிறந்தநாள் விழா 24–ந் தேதி அன்று அண்ணா தொழிற்சங்க பேரவையின் சார்பாக சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் அனைவரும், இந்த ஆண்டு வழிபாட்டு தலங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் செய்தும், ஆங்காங்கே அம்மாவின் உருவப் படத்தை அலங்கரித்து மாலை அணிவித்து மலர்கள் தூவி வணங்கியும்,

### 78 குழந்தைகளுக்கு பரிசு பெட்டகம்

தொழிற்சங்க கொடியேற்றி இனிப்புகள்வழங்கியும், முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், பள்ளி குழந்தைகள், ஏழை, எளியோர்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் போக்குவரத்து கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அந்தந்த பகுதியில் குறைந்தபட்சம் 78 தாய்மார்களுக்கு புடவை மற்றும் தங்களால் இயன்ற நலத்திட்டங்களை வழங்கியும்,

78 பள்ளி குழந்தைகளுக்கு நலத்திட்டங்களை வழங்கியும், அம்மா பிறந்த நாளில் பிறக்கும் 78 குழந்தைகளுக்கு அம்மா பரிசு பெட்டகம் வழங்கியும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களுக்கு அன்னதானம் வழங்கியும் அம்மாவின் பிறந்தநாளை ஆடம்பரம் இல்லாமல் வெகு சிறப்பாக கொண்டாடுவது என இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

### தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம்

தி.மு.க. அரசு, ஆட்சியில் அமர வேண்டும் என்ற நோக்கத்திற்காக பொய்யான தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்து 58 மாதங்கள் கடந்தும், அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றியதுடன், எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல, வீட்டு வரி உயர்வு, மின்கட்டணம் மூன்று முறை உயர்வு, விலைவாசி பல மடங்கு உயர்வு, பால் விலை உயர்வு, மாதாமாதம் மின் நுகர்வு கணக்கெடுப்பை அமுல்படுத்தாதது, கேஸ் சிலிண்டருக்கு ரூ.100 வழங்காதது, பெட்ரோல், டீசல் விலையை குறைக்காதது, பதவியேற்ற 100 நாட்களில் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் அனைத்து கோரிக்கைகளும் தீர்த்து வைக்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றாதது.

மூன்று ஆண்டுகளாக இருந்த ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை 4 ஆண்டுகளாக மாற்றி அவர்களின் வயிற்றில் அடித்தது போன்ற ஸ்டாலின் ஆட்சியின், மக்கள் விரோத செயல்களை எடப்பாடியாரின் தேர்தல் வழிகாட்டுதல்படி, களப் பணியாற்றி, மக்களிடம் எடுத்துச் சொல்லி, தி.மு.க. குடும்ப ஆட்சியை, வீட்டுக்கு அனுப்புவது என்று இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

அன்றைய எதிரிகளின் சுமார் 34,000 ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை எதிர்கொண்டு, தமிழக மக்களின் நலன் காத்த எடப்பாடியாரின் சாதனைகளை ஆங்காங்கே, மக்களிடையே துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள், திண்ணை பிரச்சாரங்கள் போன்றவற்றின் வாயிலாக அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அயராது உழைத்து, தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து, மீண்டும் அம்மா ஆட்சி அமைய, எடப்பாடியாரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அரியணையில் அமர்த்துவதற்கு அரும் பாடுபடுவோம் என, அண்ணா தொழிற்சங்கப் பேரவை சபதம் ஏற்கிறது.

### போராட்டங்கள்

நேற்று முன் தினம் (11–ந் தேதி) டாஸ்மாக் அண்ணா தொழிற்சங்கத்தின் கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி நடைபெற்றது. இதேபோல, அண்ணா தொழிற்சங்கப் பேரவை சார்பாக, போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்கு, போக்குவரத்துத் துறை முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் தலைமையிலும் மின்சாரப் பிரிவு தொழிற்சங்கம் சார்பாக, காலி பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக முன்னாள் அமைச்சர் பி. தங்கமணி தலைமையிலும்

சிவில் சப்ளைஸ் சங்கம் சார்பாக, பருவ கால பணியாளர்களை பணிநிரந்தரம் செய்வது தொடர்பாக, முன்னாள் அமைச்சர் ஆர். காமராஜ் தலைமையிலும் கூட்டுறவு சங்கம் சார்பாக, ஓய்வூதியம் உயர்த்தி வழங்குவது தொடர்பாக, முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜு தலைமையிலும்

சென்னை மாநகராட்சி அண்ணா தொழிற்சங்கம், ஆட்டோ சங்கம், தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் ஆகிய சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, எடப்பாடியாரின் அனுமதி பெற்று, தி.மு.க. அரசு, தொழிலாளர்களுக்கு இழைத்த துரோகங்களை மக்களிடம் எடுத்துச் சென்று மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் அண்ணா தொழிற்சங்கப் பேரவை சார்பில், அம்மாவின் பிறந்தநாளுக்கு முன்பாக நடத்துவது என்று இக்கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

பிரக்ருதி, சம்ருதி, ஆத்யாவின் சலங்கை பூஜை

# தத்தி வரும் தளிர் நடையில் தாளம், தாவி வரும் கை அசைவில் பாவம்: நினைவில் நிழலாடும் முத்துக்கள் மூன்று



சென்னையில் முனைவர் லட்சுமி ஜெயப்பிரியாவின் (சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து பரதநாட்டியத்தில் பிஎச்டி பட்டம்) தலைமையில் வெற்றிகரமாக இயங்கி வரும் ஸ்ரீ குரு கிருபா நாட்டிய கலா மந்திர் ட்ரஸ்டின் மாணவிகள் பிரக்ருதி ஸ்ரீராம் (10 வயது), வி சம்ருதி (8 வயது), ஆத்யா ஏ சங்கர் (7 வயது). இவர்களின் நடன அரங்கேற்றம் ராணி சீதை ஹாலில் மிகச் சிறப்பாக நடந்தது.

அரசியல் கலை இலக்கிய ஆய்வாளர், அறிஞர், கட்டுரையாளர் என்று பன்முகத்தன்மை பத்திரிக்கையாளர் காலச்சக்கரம் நரசிம்மா (மூத்த கதை வசன கர்த்தா இயக்குனர் 'சித்ராலயா' கோபுவின் மகன்), ராணிப்பேட்டையில் உள்ள பத்மஸ்ரீ நாட்டியாலயா பள்ளியின் நிறுவனர் பத்மப்ரியா சீனிவாசன், முன்னணி இளம் நாட்டியத் தாரகை "யுவ கலா பாரதி" லேகா பிரசாத், மக்கள் குரல் வீ. ராம்ஜீ சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று வாழ்த்தினார்கள்.

விநாயக கவித்துவம், காமாட்சி ஸ்வர ஜதி இரண்டிலும் 3 பேரும் இணைந்து ஆடினார்கள். ஓம் சரவணபவா ..பாடலுக்கு பிரக்ருதியும், ஆடாது அசங்காது வா.. பாடலுக்கு ஆத்யாவும், மகா தேவ சம்போ... பாடலுக்கு சம்ருதியும் தனித்தனியாக ஆடினார்கள்.

தசாவதாரம்... பாடலுக்கு மூவரும் இணைந்தே ஆடினார்கள். (மதுரை ஆர் முரளிதரனின் சாகித்தியம்.) வர்ணமாக எடுத்து ஆடும் இந்தப் பாடலை மூவருக்கும் சொல்லிக் கொடுத்து துணிச்சலாக மேடை இயற்றியதில் குரு லட்சுமி ஜெயப்பிரியாவின் பயிற்சி பளிச்சிட்டது. நிறைவாக ருக்மணி தேவி அருண்டேலின் தில்லானா.

நவராத்திரி கொலு பொம்மையில் இடம்பெறும் வசீகர பொம்மை போல் அலங்காரம் ஆடை, அணிகலன்களில் மூவரும் தனி அழகில் பார்வையாளர்களை கவர்ந்தார்கள், மேடையில் தோன்றிய அந்த நிமிடமே. ஆசான் அவரவர்களின் திறமை – கிரஹிக்கும் அவர்களின் உணர்வை அறிந்து, தெளிந்து அதற்கேற்ப பயிற்சி கொடுத்து மேடை ஏற்றியது பாராட்டுக்குரியது என்று சிறப்பு விருந்தினர்கள் ஆடிய சிறுமிகளையும் ஆசனையும் மனம் திறந்து வாழ்த்தினார்கள்.

நட்டுவாங்கம் – சாதனா லட்சுமி நரசிம்மன், வாய்ப்பாட்டு – பிரியங்கா சுந்தர்: இனிமைக் குரல்கள் இரண்டின் சங்கமம். மிருதங்கம் நாகராஜன், வயலின் விஜய ராகவன், புல்லாங்குழல் தேவராஜ், வீணை அனந்த நாராயணன்: மூத்த அனுபவசாலிக் கலைஞர்கள் – இளம் சிஷ்யைகளுக்கு கிடைத்தது, குரு பார்வையில். அனுசரணையாக வாசித்து, அமர்க்களப்படுத்தினார்கள்.

சிவம் கணேசன்: அழகு தமிழ் வர்ணனை, அரங்கை ரசிக்க வைத்தது. ஒப்பனை பூபதி, ஆடை அலங்காரம் நியூ வின்னர் ட்ரெஸ்ஸஸ், புகைப்படம் நிவேத் உதயகுமார், வீடியோ A4 மீடியா, மேடை அலங்காரம் குணா.

ஓம் சரவணபவ பாடலுக்கு குரு லட்சுமி ஜெயப்பிரியாவுடன் இணைந்து அவரது சிஷ்யை மேத்தா முரளி பயிற்சி அளித்ததும், தசாவதாரம் பாடலுக்கு குருவின் மூத்த சிஷ்யைகள் இணைந்து பயிற்சி கொடுத்ததும், நட்டுவாங்கத்திற்கு சாதனாவை அமர்த்தியதும்... அருமை.

இதன் மூலம் தன் மூத்த சிஷ்யைகளை சொந்தக் காலில் நிறுத்த ஆயத்தமாகி வருகிறார் லட்சுமி ஜெயப்பிரியா என்பது பெருமைக்குரிய விஷயம் என்று காலச்சக்கரம் நரசிம்மா உட்பட அனைவரும் சிலாகித்து பேசினார்கள்.

(ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதியான குருமார்களில் ஒருவர், 20 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம்).

பிரக்ருதியின் பெற்றோர் சரண்யா ஸ்ரீராம், சம்ருதியின் பெற்றோர் சக்தி பிரியாவிஜய வெங்கடேஷ், ஆதியாவின் பெற்றோர் அமர்நாத் சங்கர் பிரவீனா சிறப்பு விருந்தினர்களை வரவேற்று கௌரவித்தார்கள்

பிரக்ருதி (கோபாலபுரம் டிஏவி பெண்கள் மேல்நிலைப் பள்ளி), சம்ருதி (பத்மா சேஷாத்ரி பாலபவன் பள்ளி), ஆத்யா (பத்மா சேஷாத்ரி பாலபவன் பள்ளி) திரை விலகியதும் அடி எடுத்து வந்த அழகு அரங்கின் வெள்ள ஒளியில் அழகு தெய்வம் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்ததோ... என்று கேட்வி எழுப்பும் உணர்வை ஊட்டியது. சட்டென்று கிரகித்துக் கொள்ளும் இளம் வயது. அதன் எதிரொலி

**மூவரும் அனுபவித்து ஆடினார்கள், அர்த்தம் புரிந்து ஆடினார்கள், பக்தி ரசம் பாவம் உணர்ந்து ஆடினார்கள் என்றால் இந்தக் கூட்டணி வெற்றிக்கு அடிப்படை குரு லட்சுமி ஜெயப்பிரியாவின் ஆளுமையே என்று அவர் இருக்கும் திசை நோக்கி சுட்டுவிரல் நீட்டலாம்!**

**வீ ராம்ஜீ**


**MATRIMONY.COM LIMITED**
Regd.Off: No.94, TVH Beliciaa Towers, Tower II, 5th Floor, MRC Nagar, Raja Annamalaipuram, Chennai - 600028
Website: www.matrimony.com
CIN: L63090TN2001PLC047432

matrimony.com bharat matrimony

| Sl. No | Particulars | Extract of Statement of Consolidated Unaudited Financial Results for the Quarter and Nine Months ended 31st December 2025 (Rs.in lakhs except EPS) | | |
|---|---|---|---|---|
| | | Quarter ended December 31, 2025 (Unaudited) | Nine Months ended December 31, 2025 (Unaudited) | Quarter ended December 31, 2024 (Unaudited) |
| 1. | Total Income from Operations | 11,936 | 36,179 | 11,844 |
| 2. | Net Profit for the period (before Tax, Exceptional items) | 1,066 | 3,144 | 1,212 |
| 3. | Net Profit for the period before tax (after Exceptional items) | 1,066 | 3,144 | 1,212 |
| 4. | Net Profit for the period after tax (after Exceptional items) | 830 | 2,446 | 997 |
| 5. | Total Comprehensive Income for the period | 840 | 2,455 | 994 |
| 6. | Equity Share Capital | 1,078 | 1,078 | 1,078 |
| 7. | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | 23,081 | | |
| 8. | Earnings Per Share (of Rs.5/- each not annualized)- | | | |
| | 1. Basic: | 3.85 | 11.34 | 4.54 |
| | 2. Diluted: | 3.85 | 11.34 | 4.54 |

Note:

1. The extract of the unaudited standalone financial results are as under: -

| Particulars | Quarter ended December 31,2025 (Unaudited) | Nine Months ended December 31,2025 (Unaudited) | Quarter ended December 31, 2024 (Unaudited) |
|---|---|---|---|
| Total Income from operations | 11,915 | 35,940 | 11,738 |
| Net Profit for the period before tax and after Exceptional items | 1,121 | 3,175 | 1,193 |
| Net Profit for the period after tax and Exceptional items | 898 | 2,500 | 984 |

2. The above is an extract of the detailed format of financial results filed with the stock exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015 (as amended). The full format of the financial results are available on the websites of the Stock Exchange(s) at www.nseindia.com & www.bseindia.com and the Company's website at www.matrimony.com.

3. The above results were reviewed and recommended by the Audit Committee on February 11th 2026 and approved by the Board of Directors at their meeting held on February 12, 2026 at Chennai.

Place: Chennai
Date: February 12, 2026

For and on behalf of the Board of Directors
of Matrimony.com Limited
Murugavel Janakiraman
Chairman & Managing Director



**விவ்ரிடி கேபிடல் லிமிடெட்**
(CIN - U65929TN2017PLC117196)
பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஜக்ரியா மெட்ரோபாலிட்டன், எண். 200/1-8, 2வது தளம், பிளாக் -1, அண்ணா சாலை, சென்னை - 600002.

**31 டிசம்பர், 2025 அன்றுடன் முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகள்**
[ செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015-ன் விதி 52 (8) மற்றும் 52 (4) ]

(ரூபாய் லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | டிசம்பர் 31, 2025ல் முடிவடைந்த காலாண்டு | டிசம்பர் 31, 2024ல் முடிவடைந்த காலாண்டு | மார்ச் 31, 2025ல் முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|
| | | ( தணிக்கை செய்யப்படாதது ) | ( தணிக்கை செய்யப்படாதது ) | ( தணிக்கை செய்யப்பட்டது ) |
| 1 | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் | 43,802.29 | 33,454.58 | 1,34,711.18 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் / ( நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன் ) | 8,063.43 | 6,518.25 | 29,063.38 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 8,063.43 | 6,518.25 | 29,063.38 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 5,955.64 | 4,876.02 | 22,004.08 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) ( வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது | 6,599.51 | 4,902.96 | 22,597.22 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1,827.91 | 1,800.59 | 1,804.08 |
| 7 | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | 88,631.22 | 65,052.97 | 71,863.51 |
| 8 | பங்கு பிரீமியம் கணக்கு | 1,32,233.46 | 1,31,882.64 | 1,31,929.82 |
| 9 | நிகர மதிப்பு | 2,31,786.61 | 2,07,830.23 | 2,14,691.43 |
| 10 | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 8,71,147.70 | 7,16,657.07 | 8,01,114.58 |
| 11 | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | - | - | - |
| 12 | கடன் பங்கு விகிதம் | 3.73 | 3.31 | 3.48 |
| 13 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்பட்டது |
| | 1. அடிப்படை | 6.18 | 5.08 | 22.91 |
| | 2. டைலூட்டட் | 6.09 | 5.02 | 22.50 |
| 14 | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil | Nil |
| 15 | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | Nil | Nil | Nil |
| 16 | கடன் சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA |
| 17 | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA |

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015-ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்ஸ்சேஞ் போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 52(8) மற்றும் 52(4)-ன் கீழ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள டிசம்பர் 31, 2025-ம் காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் ( URL.www.bseindia.com ) மற்றும் கம்பெனியின் இணையதளமான ( www.vivriticapital.com /investors.html ) - ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52 (4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்ஸ்சேஞ் (பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து ( www.bseindia.com ) ல் அணுகலாம்.

விவ்ரிடி கேபிடல் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN 06848801

இடம் : சென்னை
தேதி : 11-02-2026



PGP GROUP

**தரணி சுகாஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 'பிஜிபி ஹவுஸ்', புதிய எண்.59 (பழைய எண்.57) ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034
தொலைபேசி எண்.91-44-28311313 தொலைநகல் எண்.091-44-28232074
CIN-L15421TN1987PLC014454
மின்னஞ்சல்: secretarial@dharanisugars-pgp.com இணையதளம்: www.dharanisugars.com

**டிசம்பர் 31, 2025 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் அறிக்கை.**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | காலாண்டு முடிந்தது | | | ஒன்பது மாதங்கள் முடிந்தது | | ஆண்டு முடிந்தது |
|---|---|---|---|---|---|---|---|
| | | டிசம்பர் 31, 2025 தணிக்கை செய்யப்படாத | செப்டம்பர் 30, 2025 தணிக்கை செய்யப்படாத | டிசம்பர் 31, 2024 தணிக்கை செய்யப்படாத | டிசம்பர் 31, 2025 தணிக்கை செய்யப்படாத | டிசம்பர் 31, 2024 தணிக்கை செய்யப்படாத | மார்ச் 31, 2025 தணிக்கை செய்யப்பட்டது |
| 1. | செயல்பாடுகளின் மொத்த வருமானம் (பிற வருமானம் உட்பட) | 17.25 | 176.69 | 22.47 | 217.04 | 54.25 | 71.52 |
| 2. | காலத்திற்கான லாபம் (இழப்பு) (வரிக்கு முன், விதிவிலக்கான பொருட்கள்) | (2,028.19) | (1,975.26) | (1,863.54) | (6,061.81) | (5,154.91) | (8,491.83) |
| 3. | வரிக்கு முந்தைய காலத்திற்கான லாபம் (இழப்பு) (விதிவிலக்கான பொருட்களுக்குப் பிறகு) | (2,028.19) | (1,975.26) | (1,883.54) | (6,061.81) | (5,821.38) | (9,299.53) |
| 4. | வரிக்குப் பிந்தைய காலத்திற்கான லாபம் (இழப்பு) (விதிவிலக்கான பொருட்களுக்குப் பிறகு) | (2,028.19) | (1,975.26) | (1,883.54) | (6,061.81) | (5,821.38) | (9,299.53) |
| 5. 6. | அந்தக் காலத்திற்கான மொத்த விரிவான லாபம் (இழப்பு) [அந்தக் காலத்திற்கான லாபம் (இழப்பு) (வரிக்குப் பிறகு) மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பிறகு)] | (2,028.19) | (1,975.26) | (1,883.54) | (6,061.81) | (5,821.38) | (9,299.53) |
| | ஈக்விட்டி பங்கு முலதனம் | 4,151.43 | 4,151.43 | 3,320.00 | 4,151.43 | 3,320.00 | 4,151.43 |
| 7. 8. | இல் காட்டப்பட்டுள்ளபடி இருப்புக்கள் (மறுமதிப்பீட்டு கையிருப்பு தவிர) முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை | NA | NA | NA | NA | NA | (20,479.57) |
| 9. | ஒரு பங்கின் வருவாய் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடர்ந்து மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு) | | | | | | |
| | (அ) அடிப்படை | (4.89) | (4.76) | (5.67) | (14.60) | (17.53) | (24.60) |
| | (ஆ) நீர்த்த | (4.89) | (4.76) | (5.67) | (14.60) | (17.53) | (24.60) |

குறிப்புகள் : மேலே உள்ளவை டிசம்பர் 31, 2025 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும். 2015 ஆம் ஆண்டின் (SEBI பட்டியல் மற்றும் கடமைகள் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 33 இன் கீழ் பங்குச் சந்தை மற்றும் கிடைக்கும் நிறுவனத்தின் பங்குகள் www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகிய பங்குச் சந்தை இணையதளங்களில் பட்டியலிடப்பட்டுள்ளது மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.dharanisugars.com இல் கிடைக்கும்.

இடம் : சென்னை
தேதி : பிப்ரவரி 12, 2026

டாக்டர் பழனி G பெரியசாமி
செயல் தலைவர்
DIN: 00081002



APOLLO SINDOORI HOTELS LIMITED

**அப்பல்லோ சிந்தூரி ஹோட்டல்ஸ் லிமிடெட்**
CIN:L72300TN1998PLC041360
பதிவு அலுவலகம் : உசேன் மேன்ஷன், தரை தளம், எண்.43/5, கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 600006.
தொ.பே.:044 49045000, மின்னஞ்சல்: info@apollosindoori.com, இணையதளம்: www.apollosindoori.com

**31 டிசம்பர் 2025 - ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்கள் தணிக்கை செய்யப்படாத தனித்தியங்கும் மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | தனித்தியங்கும் | | | | | | ஒருங்கிணைந்த | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முடிந்த காலாண்டு 31.12.2025 (Unaudited) | முடிந்த காலாண்டு 30.09.2025 (Unaudited) | முடிந்த காலாண்டு 31.12.2024 (Unaudited) | முடிந்த ஒன்பது மாதம் 31.12.2025 (Unaudited) | முடிந்த ஒன்பது மாதம் 31.12.2024 (Unaudited) | முடிந்த ஆண்டு 31.03.2025 (Audited) | முடிந்த காலாண்டு 31.12.2025 (Unaudited) | முடிந்த காலாண்டு 30.09.2025 (Unaudited) | முடிந்த காலாண்டு 31.12.2024 (Unaudited) | முடிந்த ஒன்பது மாதம் 31.12.2025 (Unaudited) | முடிந்த ஒன்பது மாதம் 31.12.2024 (Unaudited) | முடிந்த ஆண்டு 31.03.2025 (Audited) |
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 9,258.07 | 8,652.34 | 8,090.89 | 25,797.91 | 22,990.93 | 30,857.14 | 16,140.03 | 14,962.52 | 14,097.73 | 44,930.71 | 40,373.15 | 54,178.84 |
| செயல்பாடற்ற பிற வருமானம் | 0.00 | 11.99 | 200.00 | 216.76 | 619.04 | 827.29 | 150.60 | 279.40 | 236.91 | 875.30 | 790.00 | 1,030.01 |
| மொத்த வருமானம் | 9,258.07 | 8,664.33 | 8,290.89 | 26,014.67 | 23,609.97 | 31,684.43 | 16,290.63 | 15,241.92 | 14,334.63 | 45,806.01 | 41,163.15 | 55,208.85 |
| இக்காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்) | 338.63 | 497.06 | 268.85 | 1,244.11 | 1,005.92 | 1,238.72 | 538.20 | 493.13 | 315.47 | 1,502.53 | 1,057.79 | 1,206.90 |
| வரிக்கு முன் இக்காலத்திற்கான நிகர இலாபம்/(நஷ்டம்) (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 192.41 | 497.06 | 268.85 | 1,097.89 | 1,005.92 | 1,238.72 | 124.49 | 472.05 | 315.47 | 1,067.59 | 1,057.79 | 1,206.90 |
| வரிக்கு பின் இக்காலத்திற்கான நிகர இலாபம்/(நஷ்டம்) (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 160.33 | 349.44 | 203.32 | 810.17 | 718.02 | 1,003.97 | 75.65 | 309.00 | 185.93 | 779.46 | 556.63 | 772.49 |
| இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான இலாபம் (நஷ்டம்) உள்ளடக்கியது (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) | 160.33 | 349.44 | 203.32 | 810.17 | 718.02 | 1,003.97 | 75.65 | 309.00 | 185.93 | 779.46 | 556.63 | 772.49 |
| சம பங்கு மூலதனம் (முக மதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5) | 130.02 | 130.02 | 130.02 | 130.02 | 130.02 | 130.02 | 130.02 | 130.02 | 130.02 | 130.02 | 130.02 | 130.02 |
| பங்கு ஆதாயங்கள் (ரூ.) (ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5) அடிப்படை மற்றும் நீர்த்த (வருடாந்திர அற்ற) | 6.17 | 13.44 | 7.82 | 31.16 | 27.61 | 38.61 | 2.91 | 11.88 | 7.15 | 29.97 | 21.41 | 29.71 |

குறிப்பு

1. மேற்கண்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் கம்பெனியின் தணிக்கை குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு 12.02.2026 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 விதி 33-ன் கீழ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஒன்பது மாதங்களுக்கான டிசம்பர் 31, 2025-ல் முடிவடைந்த தணிக்கை செய்யப்படாத தனித்தியங்கும் மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம். டிசம்பர் 31, 2025-ன் முடிவடைந்த காலாண்டு/ஒன்பது மாதத்திற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச்-ன் இணையதளம் www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணைய தளம் www.apollosindoori.com-ல் கிடைக்கும்.
3. மேற்குறிப்பிட்ட முடிவுகள் கம்பெனிகளின் சட்டம் 2013, பிரிவு 133-ன் கீழ் கம்பெனிகளின் விதிகள் (Indian Accounting Standard) (IND AS) 2015-ல் குறிப்பிட்டுள்ள படி தயார் செய்யப்பட்டிருக்கிறது.

இயக்குநர்கள் குழுவிற்காக அவர்கள் சார்பாக

இடம்: சென்னை
நாள்: 12.02.2026

மதுரா கணேஷ்
தலைவர்